உ
சிவமயம்



# அமரர்
# திரு. வெற்றிவேல் முத்துக்குமாரு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "நினைவு மலர்"

17.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# திரு வெற்றிவேல் முத்துக்குமாரு

அவர்களின் மறைவின் நினைவாக மலரும்,

# நினைவு மலர்

**17.07.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமெக் கில்லையே
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தர கோசமங் கையற்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானெனைத் தாங்கிக் கொள்ளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளளவு இல்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வெற்றிவேல் முத்துக்குமாரு அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஈழமணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள சிறுப்பிட்டி என்ற குக்கிராமத்தின் செல்லப்பிள்ளையார் சூழலில் விவசாயத்தை தொழிலாக கொண்ட நிலாச்சுகாந்தர் வெற்றிவேல் தம்பதிகளுக்கு ஏக புத்திரனாக திருவாளர் முத்துக்குமாரு அவர்கள் 1914ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் அமரர். அவர்களுக்கு இரண்டரை வயது எட்டியபோது காலமானார். தாயார் மற்றும் உறவினர்களின் அரவணைப்பில் அறியா பருவத்தைக் கழித்தார். மழலைக் காலத்தை மகிழ்ச்சியாக கழித்த அவரது வாழ்வில் இயற்கை மீண்டும் சோதித்தது. தாயாரையும் 11 வயதில் பறித்துக் கொண்டது. தனிக்கடலில் துடுப்பிழந்த படகு போல் உறவினர்களின் அரவணைப்பில் வாழ்ந்தார்.

அமரர் அவர்கள் அக்காலத்து ஆரம்ப கல்வியை சிறுப்பிட்டி இந்து தமிழ் வித்தியாசாலையில் மேற்கொண்டார். அவரது கல்வியின் ஆர்வத்தால் தனது இடைநிலைக் கல்வியினை கந்தரோடை ஸ்கந்த வரோதயா கல்லூரியில் தொடர்ந்தார். அவரது கல்லூரிக் கல்வியின் பயனால் அவரால் சாரளமாக ஆங்கிலத்தில் உரையாட முடிந்தது. ஆனால் அவரது துரதிஸ்ரவசமாக அவரை வழிநடத்த குடும்பத்தில் பெரியவர்கள் இல்லாத காரணத்தால் தனது கல்லூரிப் படிப்பை இடைநிறுத்திக் கொண்டார்.

இவருடைய உறவிர்களில் சிலர் வெளிநாடுகளிலும், கல்வி கற்றவர்களாகவும் இருந்த காரணத்தினால் குறிப்பாக அதிபர்.க.அருணாசலம் அவர்களின் நன்மதிப்பை பெற்ற காரணத்தினாலும் அதிபர் அவர்கள் கல்விமானாக மாத்திரமல்லாது சிந்தனையாளராகவும் அற்பணிப்புடன் செயற்படுவார் என்ற காரணத்தினால் அவர்களின் சிநேகிதம் தனது வாழ்க்கை முறையையும் மாற்றி மதுபானம், களவு, பொய் இல்லாத நேரிய வாழ்க்கை முறையைப் பின்பற்ற வைத்தது என அமரர் அவர்கள் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தனது தந்தையாரின் முதுச காணிகள் அவரது விவசாய முயற்சிக்கு கைகொடுத்து அவர் ஒரு முழுநேர விவசாயியாக செயற்பட்டார். அவரது ஓய்வு நேரங்களில் பத்திரிகை வாசித்தல், உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுதல் என தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

இவருக்கு வாலிப வயதை அடைந்ததும் ஊர் பெரியவர்கள் அதே ஊரைச்சேர்ந்த திரு.திருமதி.அம்பலவாணரி தம்பதியின் புதல்வியான வள்ளிப்பிள்ளை அவர்களை திருமணம் செய்து வைத்தனர். பொறுமையும் சாந்தமும் உள்ள குணவதியான இவருடைய துணைவியாரின் இல்லத்தை செவ்வன நடத்தியதன் பயனாக 5 சற்புத்திரர்களையும் ஏகபுத்திரியையும் பெற்று மகிழ்ந்தனர்.

அமரர் அவர்கள் தனக்கு கிடைக்காத கல்வியை பிள்ளைகளுக்கு எப்பாடுபட்டும் கொடுக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தார்கள். இதன் காரணமாக மூத்த மகனாகிய நடராசாவினை விவசாயத்துறையில் குண்டக சாலையில் Diploma பட்டம் பெறவைத்தார். இதன் பயனாக L.O பதவி வகித்து பலரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இரண்டாவது புதல்வனான தியாகராசா கொழும்பு மருத்துவக் கல்லூரியில் Pharmacist ஆக பட்டம் பெற்று வைத்திய இலாவில் பணிபுரிந்தார்.

மூன்றாவது மகளான சறோஜினிதேவி அவர்கள் அக்கால முறைப்படி அயலில் இருந்த பாடசாலையில் சில ஆண்டு கல்வி பயின்று பின்னர் தாயாருடன் குடும்பத்தைக் கவனித்தார்.

நான்காவது மகனான நவரத்தினராசா குண்டகசாலை கல்வி பயின்று அயல்நாடு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது மகனான ஸ்ரீஸ்கந்தராஜா அருகாமையிலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று பின்னர் ஆண்தாதியாகப் பட்டம் பெற்று பணிபுரிகின்றார்.

ஆறாவது மகனான கிருஸ்ணராஜா தனது கல்வியை அருகாமையிலுள்ள பாடசாலையில் கல்வி கற்று பின்னர் விவசாயத்தை மேற்கொண்டார். இவ்வாறு இருக்கும் போது நாட்டின் ஏற்பட்ட அசாதாண சூழ்நிலை காரணமாக வானூர்தியின் தாக்குதலில் 1990 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

அமரர் அவர்களின் மனைவியார் அவர்கள் உடல்நிலை பாதிப்பால் 1974ம் ஆண்டு மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றார். பிள்ளைகள் திருமணப் பருவத்தை அடைந்ததும் அந்தத் தருணத்தில் ஏற்புடைய இடங்களில் மணமுடித்து வைத்தார்கள்.

மூத்தமகன் நடராசாவிற்கு மந்துவிலில் சிறப்புடன் வாழ்ந்த நல்ல மாப்பான உடையார் குடும்பத்தில் இருந்து விஜயலட்சுமி என்பவரை மணம்முடித்து வைத்தார். இவர்கள் இல்லற வாழ்க்கையின் பயனாக 3 பெண்பிள்ளைகளையும் 2 ஆண் பிள்ளைகளையும் பெற்று இல்லற வாழ்வை சிறப்புடன் நடாத்தி வந்தனர்.

இரண்டாவது மகனாகிய தியாகராசா உறவுமுறையில் இருந்து வீரசிங்கம் தம்பதிகளின் மகளாகிய சகுந்தலாதேவியை மணம்முடித்து, இவர்களின் வாழ்க்கையின் பயனாக இரண்டு ஆண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர்.

மூன்றாவது மகளாகிய சறோஜினிதேவி அருகாமையிலுள்ள கந்தையா தம்பதிகளின் மகனாகிய குகதாஸன் என்பவரைத் திருமணம் முடித்து, இரண்டு ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண்குழந்தைகளையும் பெற்றெடுத்தார்கள்.

நான்காவது மகனாகிய நவரட்ணராஜா அவ்வூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் தம்பதிகளின் மகளான சிறிமதிதேவி என்பவரை திருமணம் செய்து, ஒரு ஆண்மகனையும் ஒரு பெண் பிள்ளையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றனர்.

ஐந்தாவது மகனாகிய ஸ்ரீஸ்கந்தராசாவிற்கு கொல்லன் கலட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதியரின் மகள் கலாராணியைத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அமரர் அவர்கள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்த காலம்.

மூத்த மகனாகிய நடராசாவுடன் அவரது வீட்டிலே வாழ்ந்து பேரக்குழந்தைகளைப் பராமரித்து அவரது எதிர்காலத்துடனான கல்விச் செல்வத்தை புகட்டுவதில் ஆர்வம் காட்டி நல்ல அறிவுரைகளையும் வாழ்க்கை நடைமுறைகளையும் அவர்களுக்கு போதித்தார்.

பேரப்பிள்ளைகள் பாடசாலை வாழ்நாளை முடித்து மேற்படிப்புக்களில் ஈடுபடும் காலத்தில் அமரர் அவர்களின் மூத்த மகனாகிய நடராசா அவர்கள் இயற்கை எய்தினார். மகனது இழப்பை தனது மனதில் சுமந்து கொண்டு தனது பேரப்பிள்ளைகளுக்கு நம்பிக்கையையும் வாழ்க்கையின் தைரியத்தையும் மனம் தளராது வழிநடத்தினார். நடராசா அவர்களின் பிள்ளைகளில் மூத்த மகளாகிய தர்சினி பேரனுக்கு விருப்பமான சட்டத்தரணி துறையில் பட்டம் பெற்றார் அமரர் அவர்களை ஊரில் பிரக்கிராசியர் என அன்புடன் அழைத்த பெயருக்கு உயிர் கொடுத்த பேரப்பிள்ளையை பார்தது சந்தோசப்பட்டார். இவருக்கு திருமணம் செய்து வைத்து இரண்டு பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இவரது இரண்டாவது பேரப்பிளையான ஊர்மிளாவையும் யாழ் பல்கலைக்கழகத்தின் படிப்பை முடித்து இவருக்கு திருமணம் செய்து வைத்து ஒரு பெண் பூட்டப்பிள்ளையையும் கண்டு மகிழ்ந்தார்.

நான்காவது மகனான துஸ்யந்தன் நிதித்துறையில் கல்வி பயில வைத்து பட்டத்தையும் பெற்று திருமணம் செய்து வைத்து ஒரு பூட்டப்பிள்ளையை கண்டு மகிழ்ந்தார்.

ஐந்தாவது மகனாகிய மாதவனையும் அயல் நாட்டுக்கு அனுப்பி திருமணம் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகனாகிய தியாகராசாலவின் பிள்ளைகள் மூத்த பேரனாகிய ரமணன் அமெரிக்காவில் பட்டப்படிப்பை முடித்து திருமணம் செய்து இரண்டு பூட்டப்பிள்ளைகளைக் கண்டு மகிழ்ந்தார்.

அமரர் அவரின் மூன்றாவது பிள்ளையான சறோஜினிதேவியின் பிள்ளைகள். அவரது மூத்த பேரனாகிய மதனமோகனை அயல்நாட்டுக்கு அனுப்பியும், இரண்டாவது பேர்த்தியாகிய நித்திய அவர்களினைத் திருமணம் முடித்து வைத்து அவரது இரண்டு பூட்டப் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

மூன்றாவது பேர்த்தியாகிய தனுசியா அவர்களையும் திருமணம் முடித்து வைத்து பூட்டப்பிள்ளைகளையும்கண்டு மகிழ்ந்தார். நான்காவது பேரனாகிய விவேகானந்தன் ஊரில் வாழ்ந்து வருகின்றார்.

அமரர் அவர்களின் நான்காவது மகனாகிய நவரத்தினராசாவின் பிள்ளைகளில் மூத்த மகனாகிய ராகுலனும் இரண்டாவது மகளாகிய தனுஜாவும் அயல் நாட்டில் கல்வி பயின்று வருகின்றனர்.

அமரர் அவர்கள் தனது கடைசிக்கால திருவாழ்க்கையினை தனது மகளாகிய சறோஜினிதேவியுன் செவ்வனே கழித்து, அமரர் அவர்கள் உடல் நல குறையால் இருக்கும் போது அவருக்கு பெரும் ஊன்றுகோலாக இருந்து அவருடைய ஆசீர்வாதத்தை பெற்றனர்.

அமரர் முத்துக்குமாரு அவர்கள் இளமையில் வாழ்வின் சோதனைகளில் தெய்வத்தின் செயலால் அவற்றில் இருந்து மீண்டும் முழுமனிதாக வாழ்ந்து பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பல்வேறு துறைகளில் உலகின் பல்வேறு நகரங்களிலும் பணிபுரிகின்றார்கள். அவற்றை எல்லாம் பார்த்து உள்ளம் பூரித்து திருப்தியுடன் இறைவனடி சேர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

## திருத்தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாழம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

பூவியில் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்தடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் பறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே

காசணி மின்னல்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

அறுகெடுப் பாராய னும்மரியும
அன்றிமற் றிந்தர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுங்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மங்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உவக்கை வலக்கை பற்றி
ஜயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆடப்
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே
மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்மைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைய கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்டிம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிரு பொற்சுண்ணம் இடித்தும் நாமே

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஅரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்க
பொற்றிரு பொற்சுண்ணம் இடித்தும் நாமே

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடிச்
அருக்கண் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனை காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிச்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிச் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் பொற்சுண்ணம் இடித்தும் நாமே

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்குத்
துன்பமு மாந் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயினாருக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியையின் போது பாராயணம்செய்ய பொருத்தமான திருமுறைப் பாடல்கள்

திருநாவுக்கரசர் தேவாரம்

1) சித்திப் பரியன சித்திப்பவர்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறனடித்தலமே.

2) நடலை வாழ்வு கொண்டேன் செய்தீர் நாணிலீர்
கடலை சேர்வது சொற் பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்தூர்முனி பண்டமே.

3) தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாத்தா மாரே
வந்தவரெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கென்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடிக்கே எண்ணி எல்லால்
கண்ணிலே மற்றோர்களை கணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது ணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

5) அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாளேனுன்னை
எங்குற்றாயென்ற போதா இங்குற்றேனென் கண்டாயே.

6) இருளாய உள்ளத்து இருளை நீக்கி
இடர் பாவங் கெடுத் தோழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் நொட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை ஆதிமா தவத்துளானை
ஆறங்கம் நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

1) வெறுத்தேன் மனைவாழ்க்கை கையைவிட்டொழிந்தேன்
விளங்குங் குளைக்காதுடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக் கிறையா யவனைத்
தலைப்பத்தோடு தோள் பல இற்று விழக்
கறுத்தாய் கடல் நஞ் சமுதுண்டு கண்டம்
கடுகப்பிரமன் தலை ஐந்திலுமொன்
நறுத்தாய் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழிலஞ்சைகளத்தப்பனே.

2) வாழ்வானது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெனீரே.

3) இந்திரன் மால்பிரமன் எழிலாரமிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத் யானையருள் புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான் மலையுத்தமனே.

4) மந்திர மொன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசே செயுந் தொண்டனெனை
அந்தர மால் விசும்பில் அழகானை யருள் புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித் தான் மலை உத்தமனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் னடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி!
தேச னடி போற்றி சிவன்சே வடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என்உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராத அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர் வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பூவார் சென்னி மன்னனெய் புயங்கப்
பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும்
வெள்ளக் கருணையினால்
ஆஆ என்னப் பட்டன்பாய் ஆட்பட்
டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்
டுடையான் கழல்புகவே.

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப்
பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா
போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து நாயே
அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத் தளரா
திருப்பார் தாந்தாமே.

தாமே தமக்குச் சுற்றமும் தாமே
தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார் என்ன
மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்ரொடும் அவன்றன்
குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கள்
ஆள்வான் பொன்னடிக்கே.

அடியார் அனீர் எல்லீரும் அகல
விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ
கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன் பூவார்
கழற்கே புகவிடுமே.

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர்
காலம் இனியில்லை
உடையான் அடிகீழ்ப்பெருஞ்சாத்தோ டுடன்போ
வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியர்
கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கன்
ஆள்பவான் புகழ்களையே.

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன்
தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர்
இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று
சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம்
உருகி நிற்போமே.

நிற்பார் நிற்கநில் லாவுலகில் நில்லோம்
இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன்
ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும்
பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்
கரியான் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா
திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா
அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த
போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள்
சென்று சேர்வோமோ.

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த
வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன்
புயங்கன் அருளமுதம்
ஆராப் பருகி ஆராத ஆர்வங்
கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற்
கிடந்து புரளாதே.

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே
வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட்
கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இதுசெய்ம்மின் சிவலோ
கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ
அந்தோ அந்தோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிச்சாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ்செருகி யறி வழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவெற்றியூருடையீர் திருநீறு மீட்டுக்
கையுந் தொழப் பண்ணியைந் தெழுத்தோவுங் கற்பியுமே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகேயினிச் சாமபிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தியே.

அத்தமும் வாழ்வும் மகத்துமட் டேவிழி யம் பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தலம் மேல் வைத்தழுமைந்த ருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடருமிருவினைப் புண்ணிய பாவமுமே.

என் பெற்ற தாயாருமென்னை பிணமொன்றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன் பற்றொழியவொரு பற்றுமில்லை யுடையவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவதி தியந்தேடி
நலமொன்று மறியாத நாரியாரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசற் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வழியறியீர் கைவிடவு மாட்டீர்
கவர் பிறந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.

## அபரக்கிரியை

ஒருவர் இறந்தபின் ஆத்மா இறைவனடிசேர புத்திரர் முதலியோரால் நன்றாக செய்யப்படுவதே அபரக்கிரியை ஆகும்.(அபரம்–பிந்தியது, கிரியை – நன்றாக செய்யப்படுவது) அபரக்கிரியைகள் மூன்று பாகங்களாக வகுக்கப்படும்.

பூர்வாங்கம் – தகனம் முதல் ஏகோதிட்டம் வரை.
மத்தியாங்கம் – மாசியம் முதல் சபிண்டீகரணம் வரை.
உத்தராங்கம் – ஆப்திக சிரார்த்தம் முதல் மகாளயம் வரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக்கிரியைகள்

(உத்தரக்கிரியை, சிரார்த்தக்கிரியை, மரணக்கிரியை)

01. உக்கிராந்திக்கிரியை
02. தேகாந்த சூர்ணோற்சவம்
03. அந்தி சஞ்சயனம்
04. நக்னப் பிரச்சாதனம்
05. அந்தியேட்டி
06. பாஷாணத்தாபனம்
07. ஏகோத்திரவிருத்தி
08. பிண்டதானம்
09. நவசிரார்த்தம்
10. பாஷாண உத்தாபனம்
11. சம்கிதா சிராத்தம்
12. இடபதானம்
13. ஏகோதிட்டம்
14. மாசியம்
15. சோத கும்ப சிராத்தம்
16. சபிண்டீகரணம்
17. ஆப்திகம்
18. மஹாளயம்

அபரக்கிரியைகள் அகோரசிவாச்சாரியாரின் அபரக்கிரியைப் பத்ததியின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. ஆயினும் வைதீகமுறை, திராவிட வழிபாட்டு மரபுகள், ஊர் மரபுகள் என்பவை அபரக்கிரியையில் கலந்துள்ளது.

பிராமணர்கள் மற்றும் பிராமணரல்லாதோரின் அபரக் கிரியைகளிற் கிடையில் அதிக வேறுபாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரக்கிரியைகளில் ஆசௌசம் நீக்கலில் (துடக்கு கழிவு) இருந்து ஏனைய கிரியைகள் பிராமணக் குருக்களால் நடத்தப்படுகின்றது.

சமய தீட்சை பெற்றவர்க்கு (இவரே சைவராகக் கருதப்படுவார்.) மட்டுமே மந்திரபூர்வமான அபரக்கிரியை செய்ய வேண்டும்.

சமயதீட்சை பெறாதவருக்கும் தீட்சை பெற்றிருப்பினும் மது மாமிசம் உண்ணும் பழக்கம் கொண்டவருக்கு மந்திரமின்றி தேவார திருவாசக ஓதலுடன் தகனம் செய்தல் வேண்டும். அல்லது பூதவுடலுக்கு தீட்சை வைத்தபின் இவர்களுக்கு மந்திரபூர்வமான அபரக்கிரியை செய்ய வேண்டும்.

விசேட, நிர்வாண தீட்சை பெற்றவர்களின் இறுதிக்கிரியைகளில் சில வேறுபாடுகள் உண்டு.

**உக்கிராந்திக் கிரியை**

ஒருவருடைய உயிர் உடலைவிட்டு நீங்கும் நிலையில் (மரணத்தறுவாயில்) செய்யப்படும் விடயங்கள்,

ஒருவருக்கு மரணம் அண்மித்ததை அறியும்போது ஆசார அனுட்டான முறைமைக்கமைய புத்திரர்களால் அவர் பெயரால் அந்தணருக்கு பின்வரும் தானங்களை வழங்கலாம்.

1. கன்றோடு கூடிய பசு
2. நெல் விளையக்கூடிய அளவு விளைவு நிலம்
3. எள்ளு
4. பொன்
5. நெய்
6. உணவுத்தானியங்கள்
7. வெள்ளி
8. உப்பு
9. வெல்லம்
10. ஆடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணப்படுக்கையில் விபூதியை பூசி சிவபெருமானைத் தியானித்து தேவாரம் திருவாசகங்களைப் பாட வேண்டும்.மரணப்படுக்கையில் விபூதியை பூசி சிவபெருமானைத் தியானித்து தேவாரம் திருவாசகங்களைப் பாட வேண்டும்.

மரணத்தறுவாயில் மகன் அல்லது சமயதீட்சை பெற்ற உறவினன் மனம் கலங்காது விபூதி பூசி, வில்வமரத்தடி மண் உடலில் பூசி, வாயில் கங்கா தீர்த்தம் விட்டு தலையை தம்மடிமீது வைத்து பஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையால் மூட வேண்டும்.

**மரணம் நிகழ்ந்தவுடன் செய்ய வேண்டியது.**

சடலத்தை நீரினால் கழுவி சுத்தம் செய்து தூய்மையான ஆடைகள் அணிவித்து தென்புலத்தால் பிதிர் லோகத்தை நோக்கி ஆன்மா செல்வதை காட்ட தெற்கு (யமதிசை) நோக்கி தலை இருக்குமாறு கிடத்த வேண்டும்.

தர்பை விரிப்பில் கிடத்த வேண்டும் என்பது விதி பாவனையாக மூன்று தர்ப்பைகளை சடலத்தின் கீழ் போடுதல்.

தலைமாட்டில் ஒரு முகமேற்றபட்ட குத்துவிளக்கு வைக்கப்பட வேண்டும்.

சடலத்தை வைப்பதற்கு தூய வெள்ளை விரிப்பும் மூடுவதற்கு தூயவெள்ளை விரிப்பும் பயன்படுத்த வேண்டும்.

சடலத்தின் மீது சிறு உப்புப் பொட்டலமும் கீழே நீர் நிரம்பிய பாத்திரமும் வைக்க வேண்டும்.

சுற்றாடலில் மஞ்சள் தண்ணீர் தெளிக்கப்படுவதுடன், வேப்பிலையால் விசிற வேண்டும்.

சுற்றத்தார் அருகில் இருந்து தேவார திருவாசகங்களை பக்தியுடன் ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணக்கிரியைக்கான பந்தல் அமைத்தல்

வீட்டு முற்றத்தில் தட்டைக்கூரையுடன் கூடிய பந்தல் அமைத்தல் வேண்டும். பச்சை ஓலையால் பந்தல் வேயப்பட வேண்டும். பந்தல் வீட்டு முற்றத்தில் அமைக்கட வேண்டும். திசைகள் பக்கங்கள் பார்க்கப்படுவதில்லை.

தற்போது தகரப்பந்தல் பயன்படுத்துவதால் பச்சை ஓலை ஒன்றில் பன்னாங்கு இழைத்து பாவனையாக தகரக்கூரையின் மேல் இடுவது வழக்கம்.

பந்தல் வீட்டு வாசலுக்கு எதிராக அமைய வேண்டும் என்றும் சுவாமி அறை வாசலுக்கு எதிராக அமைய வேண்டும் என்பதும் உண்மையல்ல.

பந்தலை வெள்ளைகட்டி மாவிலை, தோரணம், வாழை, பூச்சரம் கமுகம் ஓலையால் அலங்கரிக்க வேண்டும். பந்தலின் நிலத்தை பசும் சாணத்தால் மெழுக வேண்டும்.
(யாகசாலையை அலங்கரிப்பது போன்று)

காய்வாழைக்குலை பந்தல் காலில் கட்டப்பட வேண்டியதில்லை. வீட்டு வாசலிலேய கட்டப்பட வேண்டும். காரணம் குறித்த வீட்டில் அமங்கலமான நிகழ்வு இடம்பெறுகின்றது என அறிவிக்கும் குறியீடாகவே இது அமைகின்றது.

## கிரியை செய்பவன் [கர்த்தா]

தந்தைக்கு மூத்தமகன் தாய்க்கு இளையமகன் கடமை செய்தல் வேண்டும் என்பது மரபுவியல்ல. கிரியையில் புத்திரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுதல் சிறந்தது.

பெண்கள் அபரக்கிரியையில் பங்குபற்றல் முறையல்ல. பூநூல் போடமுடியாது., வலது கையில் தெற்பை அணிய முடியாது, வீட்டு விலக்கானால் மரணக்கிரியைத் தொடர்ந்து கர்த்தாவாக இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டியவற்றை அக்காலப்பகுதியில் செய்ய முடியாது. எனவே பெண்கள் அபரக்கிரியையிலிருந்து தவிர்க்கப்படுகின்றனர்.

மகன் இல்லாதபோது பின்வருவோர் கடமை செய்யலாம்.

கணவன்

சகோதரன்

சகோதரன் மகன்

தந்தை

சபிண்டன்

சமானோதன்

சீடன்

குரு

தோழன்

அரசன்

மேற்காட்டிய வரிசையில் முன்னவர் இல்லாவிடின் அடுத்தவர் என்ற அடிப்படையில் கடமை செய்யலாம்.

மகன் அல்லது கணவன் தவிர்ந்த ஏனையோர் கடமை செய்வதாயின் அவர் தந்தை அல்லது தாய்க்கு கடமை செய்தவராக இருக்க வேண்டும்.

கிரியை செய்பவன் சவரம் செய்து நீராடி புத்தாடை இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்து கிரியைக்கு தயாராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தகனக்கிரியைக்கு தேவையான பொருட்கள்

01. மண்குடம் – 1
02. மண்சட்டி – 1
03. செம்பு – 9
04. குடம் – 1
05. குத்துவிளக்கு – 2
06. உரல் உலக்கை – 1
07. மான்தோல் – 1
08. தட்டம் – 5
09. கத்தி – 1
10. பட்டுத்துண்டு – 3
11. வேட்டி சால்வை – 2 (கர்த்தா,குருக்கள்)
12. கும்ப வேட்டி – 1
13. வேட்டி சால்லை / சேலை சட்டை. 1
14. வெள்ளைத்துணி புதியது – 3
15. சந்தனக்கட்டை
16. பாடை அல்லது சவப்பெட்டி
17. கயிறு
18. தீப்பொட்டி
19. கழிநூற்பந்து
20. பஞ்சவர்ணநூல்
21. நெல்
22. பச்சையரிசி
23. பயறு
24. உழுந்து
25.எள்
26. தேங்காய் – 16
27. தேங்காயெண்ணை
28. விபூதி
29. பால்
30. தயிர்
31. சரம்
32. சந்தனம்
33.குங்குமம்
34.அபிடேகக்கூட்டு
35. மஞ்சள்மா
36. சமித்துக்கட்டு
37. அறுகம்புல்
38. மாவிலை
39. வாழையிலை
40. அரிசிமா
41. பன்னீர்
42. நெய்
43. தேன்
44. நல்லெண்ணெய்
45. அரப்பு
46. அத்தர்
47. ஊதுபத்தி
48. சாம்பிராணி
49. தசாங்கம்
50. நெற்பொரி
51. நவதானியம்
52. விளைவுகூடம்
53. இளநீர்
54. கோசலம்
55. கோமயம்
56. வெற்றிலை பாக்கு
57. வாழைப்பழம்
58. பழவகை –மாம்பழம், தோடை
59. எலுமிச்சம்பழம்
60. தோரணம்
61. மாலை – பூதவுடலுக்கு
62. சொரி பூ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தலில் கிரியைக்கான ஒழுங்கு - பூதவுடல் குளிப்பாட்டுமுன்




## பந்தலில் கிரியைக்கான ஒழுங்கு - பூதவுடல் குளிப்பாட்டியபின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் நடைபெறும் மரணக்கிரியை

கர்த்தாவிற்கு விபூதி கொடுத்து பவித்திரம் அணியச்செய்து உபவீதம் (பூநூல்) இடப்புறமாக அணியச்செய்து சங்கற்பம் செய்து கொள்வர்.

**1. பவித்திரமணிதல்.**

★ இது கிரியையில் மனம் வாக்கு காயத்தால் வரத்தக்க பாவங்களில் இருந்து காக்கும்.

★ பவித்திரமானது மோதிரம் போல் தருப்பையினால் செய்யப்பட்டு மோதிர விரலில் அணியப்படும். அபரக்கிரியைக்கு இடது கையில் அணிய வேண்டும்.

**2. சங்கற்பம்**

★ செய்யப்போகும் கிரியையிலே மனத்தை பதித்து அவ் விடயத்திலேயே நிறுத்துவது.

★ வலது கையில் தருப்பை, பூ, அரிசி, எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலதுகை மேலாகவும், இடதுகை கீழாகவும் வைத்துக்கொண்டு இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாழில் வைக்க வேண்டும்.

★ சங்கற்ப மந்திரம் – இன்ன வருட, அயன, மாத, பட்ச, நட்சத்திர, வார, தினத்தில் என்னுடைய மாதா பிதாவிற்கு பூதவுடலைச் சுற்றி செய்வதற்காகவும் சிவாக்கினியை மூட்டுவதற்காகவும் இக்கிரியைச் செய்கின்றேன்.

**3. விக்னேஸ்வரபூசை இடம்பெறும்**

★ கிரியை சரியாக பிரச்சனைகள் இன்றி நடைபெறுவதற்காக விநாயகர் வழிபாடு முதல் கிரியையாக இடம்பெறும்.

**4. குரு வழிபாடு**

★ குரு சமய சமயகிரியைளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரில் சிவபெருமானின் திருவருள் சிறந்து நிற்றலாலும் குரு வழிபாடு இரண்டாவதாக இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **5. பஞ்ச கௌவியபூசை புண்ணியாகவாசனம் மண்டபசுத்தி**

புண்ணியாக பஞ்சகௌவியத்தை கிரியை மண்டபத்தில் தெளித்து இடத்தை சுத்தி செய்து நெற்பொரிகளை மண்டபத்தில் தூவி மண்டபத்தை தூய்மையாக்குதலாகும்.

★

**6. ஸ்நபனகும்ப பூசை அக்கினி காரியம் பூர்ணாகுதி கொடுத்தல்**

**7. பூதவுடலுக்கு நெற்பொரி போட்டு தீபம் காட்டல்**

★ குளிப்பாட்டுதல் நடைபெறுவதற்காக பூதவுடலை தூய்மையாக்கி தயார்படுத்தலாகும்.

★

**8. குளிப்பாட்டுதல்**

பூதவுடலை சிவாக்கினியில் எரிப்பதற்காக அதைப் புனிதப்படுத்தி சிவத்தன்மை கொடுத்தல் அதாவது சவத்தை சிவமாக்கும் செயற்பாடாக அமையும்.

★ வீட்டின் தெற்கு அல்லது மேற்குத் திசையில் தலை தெற்குப் பக்கமாக இருக்கக் கூடியதாக பூதவுடலை கிடத்த வேண்டும்.

★ அரப்பு நல்லெண்ணெய் பூதவுடலின் சிரசில் ஆசௌசிகளும் (துடக்குள்ளவர்கள், பெற்றோர் இருவரும் அல்லது ஒருவர் இல்லாதவர்கள் மட்டுமே) இறுதியாக கர்த்தாவும் வைப்பர்.

கர்த்தா மேற்கு பார்த்து நின்று இடது கைமேல் வலது கையைப் புறங்கையாக பிடித்து வேறொருவர் உதவியுடன் அபிடேகம் செய்ய வேண்டும்.

★ பின்வரும் ஒழுங்கில் பூதவுடலுக்கு அபிடேகம் இடம்பெறும்.

அரிசிமா
மஞ்சள்மா
அபிடேகக்கூடு
பஞ்சகௌவியம்
★ பஞ்சாமிர்தம்
பால்
தயிர்
இளநீர்
★ ஏனைய கும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகும்பம் ஒவ்வொரு அபிடேகத்திற்கு இடையிலும் நீரால்
★அபிடேகம் செய்யப்படும்.

ஆன்மாக்கள் பூவுலகில் இருந்து விண்ணுலகிற்கு செல்வதைக் குறிக்க கால்பகுதியில் இருந்து தலை நோக்கி அபிடேகம் செய்யப்படும்.

பூதவுடல் குளிப்பாட்ட முடியாத நிலையில் இருந்தால் கண்ணாடியில் தெரியும் பூதவுடலின் விம்பத்திற்கு குளிப்பாட்டுதல் பாவனையாக இடம்பெறும்.

★அபிடேகத்தின் பின் வாசனைத் திரவியங்கள் பூசி ஆடை அணிவித்து கிரியை நடைபெறும் பந்தலுக்கு பூதவுடல் கொண்டு வரப்படும்.

பந்தலிட்டு வெள்ளை கட்டி குளிப்பாட்டுதல் செய்ய வேண்டும்.
★ஆனால் அதற்காக பாவனையாக மூன்று தடியில் சிறு வெள்ளை முக்காடு கட்டி குளிப்பாட்டுமிடத்தில் நடத்தப்படுகின்றது.

**9. பூதவுடலுக்கு தீட்சையிடல், திலகம் பூமாலை இடல்**

மண்டபத்தில் குருக்களுக்கு இடப்புறமாக தலை தெற்குப்பக்கம் இருக்கத்தக்கவாறு பிரணவவாசமாகிய தெற்பைமேல் பூதவுடலை கிடத்த வேண்டும்.

★கர்த்தா விபூதியை நீரில் குழைத்து பூதவுடலுக்கு முழந்தாள், தொப்பிள், மார்பு, நெற்றி, சிரசு, புயம், முழங்கை, மணிக்கட்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரங்கள் கூறி பூசி கையை பன்னீரால் கழுவி நீரை பூதவுடலுக்கு தெளிக்க
★வேண்டும்.

சந்தனம், குங்குமம் திலகமிட்டு பூமாலை சாத்தவேண்டும். இதன்போது பிள்ளைகள் உறவினர்கள் பூமாலை சாத்தி ஆன்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திப்பார்.

**★10. பேரிதாடனம்**

சுவர்க்கம், பூவுலகம், பாதாளம் ஆகிய மூன்று உலகங்களிலும் உள்ளவர்களின் நன்மை கருதியும் எல்லாவகையான பொடியோர், அசுரர், பிசாசுகள் பறந்தோடும் பொருட்டு இறந்த ஆன்மாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ஆன்ம ஈடேற்றத்திற்கும் மூன்றுமுறை பேரிகை அடிக்கப்படும்.

குருவானவர் மந்திரரூபமாக பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், சப்த மாதர்கள், அஷ்டமா நாகங்கள், சூரியன் சந்திரன் ஆகியோரை பூஜித்து ஆவஹித்து மூன்று முறை மேளத்தை அடிப்பர்.

இதன்போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் "இறந்த ஆத்மா நன்மைய வேண்டுமெனவும், பூமியில் மறு உலகங்களில் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்துக்கும் ஐஸ்வரியம் உண்டாக வேண்டும் எனவும், ★மிருகம், பறவை முதலிய உயிரினத்துக்கு நன்மை உண்டாக வேண்டும் எனவும் உமாதேவியார் கட்டளைப்படி ★பேரினையடிக்கின்றேன் எனவும் சிவபெருமான் இதை இரட்சிக்க" மரணக்கிரியையில் பேரிகைக்கு பதிலாக மணியை அடிக்கின்றனர். அந்தியேஷ்டியில் மேளம் அடிப்பதுண்டு.

**11.சுண்ணமிடித்தலும் சாத்தலும்**

ஆன்மா தூலதேகம் நீங்கிய பின்பு சூக்கும தேகத்துடன் ★சஞ்சரிக்கின்ற நிலையை குறிப்பதே சூர்ணோற்சவமும் சுண்ணமிடித்தலுமாகும். சிவகதிக்குரிய தடைகளை நீக்கல் அதாவது பாவங்களை நீக்கி தேகசுத்தி ஆன்மசுத்தி இதன்போது ★இடம்பெறுகின்றது. இடித்த சுண்ணத்தை கண்களில் சாத்துவதன் ★மூலம் ஊனக்கண்ணை மாற்றி சிவகதிக்கான ஞானக்கண் ஏற்படுத்தப்படுகின்றது.

தனு, கரன, புவன, போகங்களால் ஏற்படும் நான் எனது எனும் அகங்காரங்களை சிவசக்தியால் உரித்து சுத்த சூரணமாக்கி ★இறைவனிடம் ஒப்புவித்து ஆன்மை இரு வகைப் பற்றுமற்று தன்செயலுமற்று சிவன்பால் நிற்கச் செய்தலாகும்.

★மஞ்சள் பொடி, அறுகு ,நல்லெண்ணெய் ஆகியவற்றை பூமாதேவியாக பூஜிக்கப்பட்ட உரலிலிட்டு மேருமலையாக பூஜிக்கப்பட்ட உலக்கையால் 81 பதமந்திரங்களைச் சொல்லி ★மூன்று தரம் இடித்து தொடர்ந்து திருப்பொற்சுண்ணம் பாடி இடித்தல் சூர்ணோற்சவமும் சுண்ணமிடித்தலுமாகும்.

இடித்தபின் வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் உள்ள கும்பநீர் விட்டுக்குளைத்து கர்த்தா நெற்றியில் ★அணிந்து இரண்டு பங்காக்கி பூதவுடலின் கண்களில் சாத்தி மிகுதியை உடல் முழுவதும் தெளிக்க வேண்டும்.

திருக்கோவில்களில் திருப்பொற்சுன்னம் இடித்து சுண்ணப்பொடி ★அபிடேகத்திற்கு (தீர்த்தமாடலுக்கு) பயன்படுத்தப்படும். ஆனால் புனிதமான சுண்ணப்பொடியை புனிதமற்ற சவத்திற்கு சாத்துவது ஆசாரக்குறைவு எனவே குளிப்பாட்டலின் பின் சவம் புனிதம் பெற்று ★சிவமாகுவதால் சுண்ணப்பொடி அதன்பின் அபரக்கிரியைகளில் பூதவுடலுக்கு சாத்தப்படுகின்றது.

### 12. பந்தம் பிடித்தலும் தானமும்

★ பாவங்கள் அகன்ற பின்பு திருவருள் உண்டாவதற்காக பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் நெய்ப்பந்தங்கள் ஏற்றப்படும்.

யாத்திரதானமும் குருக்கள் தட்சனையும் இறந்தவர் நற்கதியடையும் பொருட்டு தானமும் பிரேத யாத்திரையின் பொருட்டு தானமும் தட்சனையும் கொடுத்து கிரியை நிறைவு ★ செய்யப்படும்.

### 13. மனைவி மக்கள் வாக்கரிசியிடல்

மனைவி மக்கள் சுற்றத்தவர் (மயானத்திற்கு வரமுடியாத பெண்கள்) இடப்புறமாக சுற்றி வந்து வாய்கரிசியிடுவர். அத்துடன் பூதவுடலுக்கு பூப்போட்டு வணங்குவார்.

இரு கையாலு.ம் எடுத்து மூன்று முறை வாய்க்கரிசியிட வேண்டும். அரிசி, தேங்காச்சொட்டுக்கள், சில்லறைக்காசு என்பன கலந்து வாய்க்கரிசி இடப்படுகின்றது.

### 14. தாலி களற்றல் அல்லது நிறைநாளி வைத்தல்

கணவன் இறந்தால் மனைவி தாலையைக் களற்றி கணவனின் மார்பில் வைக்க வேண்டும்.

மனைவியிறந்தால் (சுமங்கலி) நிறைநாழியை (தீபம் நெல் நிறைந்த சேர) பூதவுடலின் கையால் தொட்டு வீட்டின் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்க வேண்டும்.

வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தேங்காய் என்பன சேலை முந்தானையில் முடிந்து விட வேண்டும்.

★ **15. பாடையை மயாணத்திற்கு எடுத்துச்செல்லல்.**

கர்தா குடத்தை முன் கொண்டு செல்ல ஓமாக்கினியில் இருந்து

★ உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியை மூன்று காலுடைய உறியில் கொண்டு செல்ல வேண்டும்.

மயாணம் செல்லும்போது அட்டதிக்கு தேவர்களின் ஆசிவேண்டி சைவாசாராம் உள்ள ஒருவரினால் அஜ்திர மந்திரத்துடன்

★ நெற்பொரி தூவப்படும்.

மயாணம் செல்லும் போது வெடி கொழுத்துவது பிழையான நடைமுறையாகும்.

★ வாத்தியம் சங்கு ஒலிக்க திருமுறைப்பாடல்களைப் பாடியவாறு செல்லுதல் வேண்டும்.

பின்னே கற்றவர் குனிந்த தலையுடன் அமைதியாகச் செல்லல் வேண்டும்.

★

**16. மயானத்தில் இடம்பெறும் கிரியை**

**1. சிதைஏற்பாடு**

வடக்குத் தெற்காக குங்குமம் மஞ்சள் இட்டு இரண்டு முழ அகலம் நான்னு முழ நீளத்திற்கு விறகு அடுக்கப்பட்டு சிதாத்தானம் அமைக்கப்பட வேண்டும்.

2. சடலத்தை சிதையில் வைத்தல்.

கால் பகுதி முன்நிற்க பூதவுடலை மும்முறை இடஞ்சுழியாக சிதையைச் சுற்றி வந்து தலைப்பகுதி தெற்குப் பக்கமாக

★ இருக்கத்தக்கதாக சிதையில் பூதவுடலை வைத்தல் வேண்டும்.

★ 3. தாலி அவிழ்தல்

சுமங்கலி இறந்தால் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய் வெற்றிலை பாக்கு பழம் என்பவற்றை எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பின்பு கணவன் தேங்காயை உடைத்து தாலியைக் பழற்றி எடுக்க வேண்டும்.

4. வாய்கரிசியிடல்.

* தற்புருஷமந்திரத்துடன் வாய்கரிசி உறவினராலும் கடைசியாக கர்தாவினாலும் இடப்பட வேண்டும்.

5. கொள்ளி வைத்தல்.

மட்குடக்கும்பத்தை (கொள்ளிக்குடம்) இடதுதோளில் வைத்து வலது கையை கொள்ளியுடன் பின்புறம் வைக்க வேண்டும்.

பூதவுடலின் தலைப்பகுதியில் தொடங்கி மூன்றுமுறை இடப்புறமாக சிதையை சுற்றிவர வேண்டும். இதன்போது வேறொருவர் குடத்தின் அடியில் கத்தியால் கொத்தி சிறு துளையிட்டு கும்பநீரை சடலத்துக்கு தெளிக்க வேண்டும்.

* தலைப்பகுதியில் திரும்பி நின்று பின் புறமாக கொள்ளியிட வேண்டும். பின்பு கொள்ளிக்குடத்தை முன்புறமாகப் போட்டு உடைக்க வேண்டும்.

தீ இடும் போது (கொள்ளி வைக்கும்) "அக்கினி தேவனே
* பரிசுத்தமாய் இருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூர்ணாகுதியை ஏற்றுக்கொள்ளும்." என்று மகதில் நினைக்க
* வேண்டும்.

கர்த்தா உபவீதம்(பூநூல்) பவித்திரம் (தெற்பை) ஆகியவற்றை களற்றி பூதவுடலின் காலில் வைத்து விழுந்து வணங்க வேண்டும்.

6. நிவாபாஞ்சலி தருப்பணம்

* அருகில் உள்ள நீர்க்கரையில் தலை முழுக வேண்டும். நீராடிய பின்பு இறந்த ஆன்மா மற்றும் முன்னோர் பிதிரர்களின் பொருட்டு இருகையாலும் நீர் எடுத்து மூன்றுமுறை தர்ப்பணம் செய்ய வேண்டும்.

* 7. வீடுதிரும்பல்

வீட்டுக்கு வரும்போது வாசலில் வேப்பிலை கடித்து உலக்கையைக் கடந்து நுழைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமுத்திரத்தில் அல்லது தீர்த்தத்தில் முழுகாவிடின் வீட்டில் தலைமுழுகுதல் வேண்டும்.
* பிசாசுகள் தொடராது இருக்க சிறு இரும்பு கொண்டு வருதல் வேண்டும்.
*

**காடாத்துதல் (அத்தி சஞ்சயனம்)**

பந்தலிட்டு வெள்ளை கட்டி காடாத்துதல் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு பாவனையாக மூன்று தடியில் சிறு வெள்ளை முக்காடு கட்டி காடாத்துமிடத்தில் நடப்படுகின்றது. தலைப்பகுதியில் விளக்கேற்றி கும்பம் வைத்து ஏனைய பொருட்களையும் வைக்க வேண்டும்.
* தீயிட்டு தகித்தமைக்குரிய தோச நிவர்த்தியாக கடாத்தல் அமைகின்றது. புண்ணிய தீர்த்தத்தில் அஸ்தி கரைப்பதால் ஆன்மா
* புண்ணிய உலகத்தை அடையும் என நம்பப்படுகின்றது.

1. பிராயச்சித்த ஓமம் மற்றும் தத்துவ ஓமம்.

அக்கினி தணித்திருந்தால் சிவாக்கினி மூட்டி பிராயச்சித்த ஓமம்
* தத்துவ ஓமம் செய்யவேண்டும்.

2. அக்கினி தணித்தல்

சூடு தணியும்வரை தண்ணீர் ஊற்றவேண்டும். தண்ணீரை கால்
* பகுதியில் இருந்து தலைப்பகுதி நோக்கி ஊற்ற வேண்டும்.

குளிப்பாட்டுதலின்போது அபிடேகம் செய்யும் அதே ஒழுங்கு
* முறையில் கிழக்குப்புறமாக நின்று மேற்குப்புறம் பார்த்து காலில் இருந்து தலை நோக்கி அபிடேகம் செய்ய வேண்டும்.

4. அனுட்டானமும் வழிபாடும்

உரிய மந்திரங்களைக் கூறி அனுட்டானம் வைக்கும் இடங்களில்
* விபூதி பூசி சந்தனம், பூ முதலியன சாத்தி தூபதீபம் காட்டி வழிபடல் வேண்டும்.
*

5. அஸ்தி எடுத்தல்

சத்தியோசாதம் முதலிய மந்திரங்களைக் கூறி முளந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொப்புள் மார்பு நெற்றி தலை ஆகிய இடங்களில் இருந்து எலும்பு எடுக்க வேண்டும்.

தலைமாட்டில் தடியால் முக்காலி செய்து அதில் சிறிதளவு பால் விட்டு சட்டியை முதலிலேயே வைக்க வேண்டும்.

எடுக்கும் எலும்புகளை சத்தம் ஏற்பட்டா வண்ணம் மெதுவாக முக்காலியில் உள்ள சட்டியில் இடவேண்டும்.

பாத்திரத்தின் வாயை கோடித்துண்டால் மூடிக்கட்ட வேண்டும். மீதி எலும்பு மற்றும் சாம்பலை வேறொரு பெட்டியில் அள்ள வேண்டும். மீதி எலும்பு மற்றும் சாம்பலை வேறொரு பொட்டில் அள்ள வேண்டும.

7. நவதானியம் விதைத்தல்

சாம்பல் அள்ளிய பின்பு அவ்விடத்தை சுத்தம் செய்து பண்படுத்தி மூன்று பாத்திகளாக்க வேண்டும்.

கர்த்தா சிறு ஏர் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து தண்ணீர் பால் தெளித்து குளிரச்செய்ய வேண்டும்.

*

8. படையலிடல் வழிபடல்.

வெற்றிலை, பாக்கு, பழம், ரொட்டி, நெற்பொரி வடை (கோது நீக்காத உழுந்தில் தயாரித்து) என்பவற்றை படையலிட வேண்டும்.

9. அஸ்தி கரைத்தல்.

எலும்பையும் சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் அல்லது சமுத்திரத்தில் கரைத்து தலை முழுக வேண்டும்.

* அஸ்தியின் பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காக அல்லது கங்கையில் கரைப்பதற்காக எடுத்து வைப்பது சமய முறைப்படி தவறாகும்.

10. வீடு திரும்புதல்

* வீட்டுக்கு வரும்போது வாசலில் வேப்பிலை கடித்து உலக்கையைக் கடந்து நுழைதல் வேண்டும்.

சமுத்திரத்தில் அல்லது தீர்த்தத்தில் முழுகாவிடின் வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தலைமுழுகுதல் வேண்டும்.

**காடாத்துக்குத் தேவையான பொருட்கள்**

1. மண்குடம்
2. பால், தயிர்
3. விபூதி
4. சந்தனம், குங்குமம்
5. வாழையிலை
6. அபிடேகக் கூட்டு
7. மஞ்சள் மா
8. பழவகை
9. நெற்பொரி
10. அடை அல்லது அரிமா ரொட்டி – 7

11. இளநீர்

★ 12. கோடித்துண்டு

13. கடகம்

14. பூசைப்பொருட்கள்

15. வாளி

★ 16. கத்தி

17. மண்வெட்டி"18. சிறு ஏர்

19. வெற்றிலை, பாக்கு

20. வாழைப்பழம்

21. சிட்டி விளக்கு

★ அல்லது பந்தம்

**நக்னதானம்**

★ தகனக்கிரியை முடிந்தபின் அன்று இறந்தவரின் பசி, தாகம் முதலியன தீர குடும்பத்தவராயுள்ள ஆசாரியாருக்கு அரிசி தானமாகக் கொடுப்பது நக்னதானமாகும்.

ஒரு குடம் அல்லது செம்பில் பச்சை அரிசி நிரப்பி அதை ஒரு புதுவேட்டியால் சுற்றிக்காட்டி ஒரு விளக்கிற்கு நெய்விட்டு ★ கொழுத்தி கொடுக்க வேண்டும்.

**எட்டு செலவு**

இறந்தவரின் ஆன்மா சாந்தியடையும் பொருட்டு செய்யப்படும் விசேட சடங்காகும். இச் சடங்கு வைதீக (ஆகமங்களின்) அடிப்படையில் செய்யப்படுவதில்லை. இறந்தவருக்கு படையல் ★ இட்டு வழிபடும் திராவிட வழிபாட்டு மரபில் வந்ததாகக் கருதலாம். எட்டாம் நாளில் செய்யப்படுவதால் எட்டுச்செலவு எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மரணம் நிகழ்ந்ததிலிருந்து 5ம், 7ம் நாட்களில் வழமையாகச் செய்யப்படுகின்றது.
இநறந்தவரின் படத்தை கதிரை ஒன்றில் வைத்து வேட்டி சால்வை அல்வலது சேலை அணிவித்து அவர் பாவித்த கண்ணாடி கைத்தடி போன்றவற்றை வைக்க வேண்டும்.

ஒரு விளக்கு எரிய விட வேண்டும். படம் வடக்கு அல்லது கிழக்கை பார்க்க வேண்டும். சடங்கை கர்த்தா தெற்கே பார்த்துச் செய்ய வேண்டும்.

இறந்தவர் விரும்பியுண்ணும் உணவு வகைகள் ஈரிக்கப்பட வேண்டும். ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும் போது கடமை செய்தவரும் வீடும் 31 நாட்களுக்கு புனிதமாக இருக்க வேண்டும். எனவே மாமிசம் மது இச் சடங்கில் படைத்தல் தவறானது.

இறந்தவரின் படத்தின் மூன்று தலை வபழையிலைள் தலை தெற்கே பார்க்க போட்டு உணவுப் பொருட்களை (உணவுவனை, பலகாரங்கள், பானங்கள், பழங்கள்) இளநீருடன் கர்த்தா படைக்க வேண்டும்.

கற்பூரம் இடஞ்சுழியாக சுற்றிக் காட்டி பஞ்சபுராணம் பாட வேண்டும். உணவு மூடிய இலையை அகற்றி வலது கையில் நீர் எடுத்து இடஞ்சுழியாக தெளித்து உணவை அற்பணம் செய்ய வேண்டும்.

எல்லா உணவுப் பொருட்களிலும் ஒரு சிறு பகுதி எடுத்து ஒரு பொட்டியில் வைத்து தீப்பந்தத்துடன் எடுத்துச் சென்று முச்சந்தியில் வைத்து பந்தத்தை அருகில் நட வேண்டும். இளநீர் மேல் கற்பூரம் கொழுத்தி அதைக் கத்தியால் இரண்டாகப் பிளந்து விட்டு வர வேண்டும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள் முச்சந்தியில் வைக்க முடியாது ஆற்றிலோ கடலிலோ விடலாம். ஊர் வழமைக்கேற்ப பகலிலோ இரவிலோ இச்சடங்கைச் செய்யலாம். ஊர் அடங்கிய நன்பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நடுநிசியில் இச்சடங்கு இடம்பெறும்.

## அந்தியேஷ்டி

சமய ஆசாரம் அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய இறுதி யாகம் அந்தியேஷ்டி ஆகும். விசேட தீட்சை பெற்றவர்கள், நிர்வாண தீட்சை பெற்றவர்கள் மூன்று தலைமுறையாக சைவ ஆசாரமுள்ள புலால் உண்ணாத சமய தீட்சை பெற்றவர்களும் அந்தியேடஸ்டி பூதவுடலில் மயணத்தில் செய்யப்படும். ஏனையவர்களுக்கு 26ம் நாட்களுக்கும் 31ம் நாட்களுக்கும் இடையில் 36 தர்ப்பபையில் மனித உருவம் (புத்தளிகை) செய்து அதை இறந்தவர் உடலாக கொண்டு அந்தியேஷ்டி நீர் கரையில் (ஆற்றங்கரை, குளக்கரை, கிணற்றடி) செய்யப்படும்.

ஐந்முள நீள அகலம் கொண்ட 4 அல்லது 12 அல்லது 16 கால்கள் கொண்ட நாலு பக்கம் வாயில் அமைத்து பந்தல் போட்டு வெள்ளைக்கட்டி சாணத்தால் மெழுக வேண்டும்.

மண்டபத்தில் படத்தில் காட்டியவாறு ஓமகுண்டம், சிதாஸ்தானம், பங்சகௌவியமேடை சுற்று வேதிகையில் தசாயுத கும்பங்கள் அமைக்க வேண்டும்.

புத்தளிகையை பூதவுடலாக கொண்டு மரணக்கிரியை காடாத்தல் இடம்பெறும்.

துர்மரணங்களுக்கு (புத்திபூர்வம் – தற்கொலை) மரணமடைந்தோர் பிசாசாக அலைவர். எனவே இறந்ததிலிருந்து 3,6,12 மாதங்களின் பின் இறந்த திதியில் அந்தியேஷ்டி செய்யப்படும்.

அந்தியேஷ்டியுடன் இடம்பெறும் ஏனைய விடயங்கள்.

பாஷாண பூசை
நவசிரார்த்தம்
இடபதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதகும்பசிரார்த்தம்

**பாஷாண பூசை**

இறந்த ஆன்மாவை ஒரு கல்லில் பூசை செய்யதல் பாஷாண பூசையாகும். இதனால் ஆன்மா சிவபதவியை அரடயத்தக்கதாகிறது. பூசையினால் ஆன்மாவுக்கு திருப்தியும் மற்றவையால் குற்ற நீக்கமும் ஏற்படும்.

பூஜித்த கல்லும் படைத்த பலி பொருட்களும் புனித நீர் நிலையில் சேர்க்கப்படும்.

வீட்டில் மண்டபம் அமைத்து பாஷாண பூசை செய்து விரிவாக அந்தியேஷ்டி வரை பூசை செய்யப்படும். தற்காலத்தில் அந்தியேஷ்டி மண்டபத்தில் தற்பை சுடுதலின் பின் இக்கிரியை சுருக்கமாக இடம் பெறுகின்றது.

ஒழுக்கமுள்ள பிராமணர்களுக்கு தானம் (பச்சையரிசி, காய்பிஞ்சு) வழங்கி அவரிடம் தானபல தீர்த்தத்தை வாங்கி பாஷாணத்தின் மீது விடவேண்டும். இது முதல்நாள் தொடக்கம் ஒன்றித்த நாளில் இடம்பெறும். இறந்த ஆன்மாவின் பிரேதத் தன்மை நீங்கி நற்கதி அடைய செய்யப்படும். இது நவசிரார்தம் எனப்படும். தற்காலத்தில் அந்தியேஷ்டி மண்டபத்தில் இக்கிரியை இடம்பெறுகின்றது.

கல், பிண்டம், சாம்பலை வாத்திய ஒலியுடன் புனித தீர்த்தத்தில் மார்பளவு நீரில் வடக்கு முகமாக நின்று விட வேண்டும்.

**இடபதானம்**

இறந்தவருடைய தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள எருதின் மூலம் சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் பிராமணருக்கு கொடுக்கப்படும்.

இதற்குப் பதிலாக தாம்பாளத்தில் அரியைப் பரப்பி அதில் இடபத்தைக் கீறி அதன்மேல் தேங்காயை வைத்து தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து தட்சணையுடன் தானம் கொடுக்க வேண்டும்.

தற்காலத்தில் அந்தியேஷ்டி மண்டபத்தில் இத்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இடம்பெறுகின்றது.

**சோதகும்பசிரார்த்தம்**


இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு நீர் நிரம்பிய பாத்திரத்தை அந்தணருக்கு தானம் செய்தல் ஆகும்.

ஒரு வருடத்திற்கு நாள் தோறும் இத்தானம் இடம்பெற வேண்டும். தற்காலத்தில் அந்தியேஷ்டி மண்டபத்தில் இத்தானம் இடம்பெறுகின்றது.

**அந்தியேட்டி மண்டப அமைப்பு**




**சிதாஸ்தானம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேஷ்க் கிரியைக்கு தேவையான பொருட்கள்

01. மண்குடம் – 2
02. மண்சட்டி – 1
03. செம்பு – 12
04. குடம் – 1
05. குத்துவிளக்கு –2
06. உரல் உலக்கை – 1
07. மான்தோல் – 1
08. தட்டம் – 5
09. கத்தி – 1
10. பட்டுத்துண்டு – 3
11. வேட்டி சால்வை – 2 (கர்த்தா,குருக்கள்)
12. கும்ப வேட்டி – 1
13. வேட்டி சால்லை / சேலை சட்டை. 1
14. வெள்ளைத்துணி புதியது – 3.மீ
15. சந்தனக்கட்டை
16. வைக்கோல் கட்டு
17. கயிறு
18. தீப்பெட்டி
19. கழிநூற்பந்து
20. பஞ்சவர்ணநூல்
21. நெல்
22. பச்சையரிசி 3kg
23. பயறு
24. உழுந்து
25.எள்
26. தேங்காய் – 20
27. தேங்காயெண்ணை
28. விபூதி
29. பால்
30. தயிர்
31. சரம்
32. பச்சைமா (புலாந்திஇலை உலர்த்திய பொடி)
33. சிவப்புமா (செங்கல் தூள்)
34. கறுப்பு மா (கரித்தூள்)
35. 2தானத்திற்கு மரக்கறி
36. அமுது
37. சில்லறைக்காசு
38. சந்தனம்
39.குங்குமம்
40.அபிடேகக்கூட்டு
41. மஞ்சள்மா
42. சமித்துக்கட்டு
43. அறுகம்புல்
44. மாவிலை – 100
45. தலைவாழையிலை
46. அரிசிமா
47. பன்னீர்
48. நெய்
49. தேன்
50. நல்லெண்ணெய்
51. அரப்பு
52. அத்தர்
53. ஊதுபத்தி
54. சாம்பிராணி
55. தசாங்கம்
56. நெற்பொரி
57. நவதானியம்
58. விளைவுகூடம்
59. இளநீர்
60. கோசலம்
61. கோமயம்
62. வெற்றிலை பாக்கு–25
63. வாழைப்பழம்–25
64. பழவகை –மாம்பழம், தோடை
65. எலுமிச்சம்பழம் –3
66. தோரணம் – 100
67. செங்கல் – 1
68. சொரி பூ
69. 1படி அரிசிப்பொங்கல்
70. 3படி அரிசிச்சோறு
71. கறிவகை 3அல்லது 5
72. பலகாரவவை – பால்ரொட்டி, முறுக்கு, கடலை
73 மாந்தடி 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துடக்குகழிவு

சமய தீட்சை பெற்ற மூன்று தலைமுறையாக சைவ போசனம் உண்போருக்கு 16 நாட்களிலும், ஏனையோருக்கு 31-ம் நாளிலும் துடக்குக்கழிவு நடைபெறும்.

* அந்தியேஷ்டி செய்பவர்கள் வீட்டைவிட்டு புறப்பட்டதும் துடக்குகழிவு இடம்பெறும்.
* வீட்டைக்கழுவி அனைவரும் நீராடிய பின் குருக்களினால் புண்ணியாகவாசனம் செய்து துடக்கு நீக்கப்படும்.

* துடக்குக் கழிவுக்கு தேவையான பொருட்கள்.

01. மாவிலை
02. தலைவாழையிலை
03. அறுகம்புல்
04. சொரிபூக்கள்
05. கோசலம், கோமம்
06. பால், தயிர்
07. நெய்
08. தேன்
09. எள்
10. வெற்றிலை, பாக்கு
11. வாழைப்பழம்
12. எலுமிச்சம்பழம்
13. இஞ்சிக்கிழங்கு
14. கற்பூரம்
15. சம்புறானி
16. ஊதுபத்தி
17. தேங்காய்
18. விபூதி
19. சந்தனம்
20. குங்குமம்
21. அரிசிமா
22. மஞ்சள் மா
23. கும்பநூல்
24. பசடைசயரழசழ
25. வேட்டி சால்லை (தானம்)
26. அரிசி (தானம்)
27. மரக்கறி
28. உப்பு
29. புளி
30. பருப்பு
31. மிளகாய்த்தூள்
32. தடசணை

### சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் என்பது இறந்த ஆன்மாவை பிதிரருடன் (தேவர்கள்) சேர்த்து வைக்கும் கிரியை சபிண்டீகரணத்திற்கு பிண்டங்களை ஒன்று சேர்த்தல் என்பது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர் வர்த்தகத்திற்கு 3பிண்டம். மத்ரு வர்க்கத்திற்கு 3பிண்டம் நிமித்தருக்கு (இறந்தவருக்கு) 1 பிண்டமும் இடப்படும். பிதிர்க்கடன்களுடன் நிமித்த பிண்டங்களைச் சேர்ப்பதால் ஆன்மா பிரேததட தன்மையிலிருந்து பிரதித் தன்மையும் சிவலோகத் தன்மையும் பெறுகின்றது. சபிண்டீகரணத்தின் பின் சிரார்த்தகளின் பிதிர் பிண்டங்கள் மட்டுமிடப்படும்.

**மாசியம்**

மாதந்தோறும் இறந்த வருடத்தில் செய்யப்படுவது மாசியமாகும். இதை விட ஊனமாசியம் (இறந்தது முதல் 27 நாளஜன் மேல் மூன்று நாள்களுள் செய்யப்படுவது) ஊனதிரி பட்ச மாசியம் (இறந்தது முதல் 40 ஆம் நாள் முதல் 45 ஆம் நாள்களுக்குள் செய்யப்படுவது) ஊணாசாண்மாசியம் (இறந்தது முதல் 170 ஆம் நாள் முதல் 180 ஆம் நாள்களுள் செய்யப்படுவது) ஊன ஆப்திகமாசியம் (இறந்தது முதல் 350ஆம் நாள் முதல் 365ஆம் நாட்களுள் செய்யப்படுவது) ஆகிய நான்கு மாசியங்கள் செய்யப்படும்.

★ மொத்தமாக இறந்த வருடத்தில் 16 மாசியம் கொடுக்க வேண்டும். இதில் ஏகோதிட்டம் முதலாவது மாசியமாக கருதப்படுவதால் 15 மாசியங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

★ 15 மாசியங்களும் முடிந்த பின்னரே சபிண்டீகரணம் செய்யப் பட வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரியங்களின் கருத்திற்கொண்டு துடக்குக் கழிவின் பின் அடுத்து வரும் நாட்களில் சபிண்டீகரணத்தன்று சபிண்டீகரணம் செய்ய முன்பு ஏகோத் திட்டத்தின் பின்பு 15 மாசியங்களையும் செய்து முடிப்பர்.

★ சபிண்டீகரணத்தன்று இதற்காக 15 தானங்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இத் தானங்களில் பின்வரும் பொருட்கள் உள்ளடக்கப்படும்.

★ காய்பிஞ்சு – கத்தரிக்காய், வாழைக்காய், பயற்றங்காய், பாகற்காய், பூசனிக்காய், எலுமிச்சம்பழம்.

★ ஏனையவை – அரப்பு, நல்லெண“ணெய், மிளகய்தூள், உப்பு,பருப்பு (வறுத்து குற்றிய பயறு)

★ தட்சணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமாசியம் இறந்த திதியில் செய்யப்பட வேண்டும். ஊன மாசியங்கள் தோசமில்லாத நாட்களில் செய்ய வேண்டும். பின்வரும் நாட்கள் தோசமுள்ளவையாகும்.

★ வெள்ளிக்கிழமை
இருத்"தை, சதுர்த்தசி, அமாவாசை திதிகள்.

★ பூரம், கேட்டை ஆயிலியம், கார்த்திகை, மூலம், பூரட்டாதி நட்சத்திரங்கள்.

★ துதியை, சப்தமி, துவாதசி,திதிகள் மற்றும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புணர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்கள் மற்றும் ஞாயிறு, செவ்வாய், சனி, வாரங்களில் மூன்று கூடும் திரிபுஷ்கரயோகம் இரண்டு கூடும் துவிபுஷ்கரயோகம்.

ஏகோதிட்டம் நீக்கிய மறுநாள் இறந்தவரின் ஆன்மா உலக வாழ்க்கையில் திருப்தி அடைந்து ஆண்மசுத்தி, நற்கதி ஏற்படவும் இறந்தருக்காக மட்டும் செய்யப்படும் தானமாகும்.

★அந்தணருக்கு நல்லெண்ணெய், அரப்பு எலுமிச்சம்பழம் கொடுத்துது நீராடியதாக பாவனை செய்யப்படும்.

★ வேட்டி, சால்வை, சந்தனம், பூ சாத்தி அரிசி மரக்கறி கொடுத்து வழிபட வேண்டும்.

★ கர்த்தா தெற்குமுகமாக பிண்டமிட்டு நைவேத்தியம் நிதேத்து, தர்ப்பணம் செய்ய வேண்டும்.

★ ஏகோதிட்டத்திற்கு 24 வகையான தானம் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 01. பவித்திரம் | 13. வேட்டி |
| 02. பூநூல் | 14. பொன் |
| 03. கமண்டலம் | 15. மோதிரம் |
| 04. உருத்திராக்கம் | 16.இரத்தினம் |
| 05.மிதியடி | 17. நெய் |
| 06. தண்டம் | 18. வெண்ணெய் |
| 07. கௌபீனம் | 19. பசு |
| 08. விபூதிப்பை | 20. பூமி |
| 09. யோகபட்டம் | 21. உணவுப் பொருட்கள் |
| 10. குடை | 22. அலங்காரப் பொருட்கள் |
| 11. குல்லாய் | 23. தாசி |
| 12. சால்வை | 24. தாசர்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தற்போது ஏகோதிட்டத்திற்கு வேட்டி சால்வை பாய் தலையணை குடை விசிறி விளக்கு செருப்பு போன்றன தானமாக தானமாக வழங்கப்படுவது வழமை.

* தமது சக்திக்கு தகுந்தவாறு தானம் தட்சணை கொடுக்கலாம். அந்தணரை வழியனுப்பி மஞ்சள் நீர் தெளித்து இடத்தை சுத்தம் செய்ய வேண்டும்.

* இறந்த ஆன்மா பிதிர்லோகம் செல்ல ஒரு வருடம் ஆகின்றது. அதுவரை மழை, வெயில், களைப்பு, பசி, தாகம் தாக்காமல் இருப்பதற்காக அந்தணருக்கு ஏகோதிட்டம் வழங்கப்படுகின்றது. எனவே தானம் ஒரு வருடத்திற்கு போதுமானதாக இருக்க வேண்டும்.

**சாங்கிதா சிரார்த்தம்**

தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டான குறைகளை நீக்க பதினொரு மந்திரங்களில் நேத்திரம் தவிர பத்து மந்திரங்களை பத்து சீலமுள்ள அந்தணர்களின் ஆவாகித்து அவர்களுக்கு செய்யும் தானம் சங்கிதா சிரார்த்தமாகும். இது சபிண்டீகரண முடிவில் இடம்பெறும்.

* உருத்திர பலியிட்டு, பிரதிபூதபலி எனப்படுகின்ற பேருணவு படைத்து தீபாராதனை தோத்திரம் செய்து வணங்க வேண்டும்.

* இறந்தவர்கள் மேல் பாடப்பட்ட சமரகவி (கல்வெட்டு) பாடி சுற்றத்தார் பூவும் நீரும் இட்டு அஞ்சலி செய்ய வேண்டும்.

**சபிண்டீகரண நாளன்று தேவையான பொருட்கள்**

1. ஏகோதிட்டப் பொருட்கள்
2. 16 மாசியங்களுக்கான தானப்பொருட்கள்
3. ஆண்டுத்திவசத்திற்கு தேவையான பொருட்கள்

**ஆப்திகம் (முதலாம் ஆண்டுத் திவசம்)**

ஓர் ஆண்டு முடிவில் செய்யப்படும் சிரார்த்தம் ஆகையால் இது ஆண்டுத் திவசம் எனப்படும். இந்த சிராத்தத்துடன் இறந்தவரைக் குறித்து செய்யப்படும் அபரக்கிரியை நிறைவுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுத்திவசத்திற்கு தேவையான பொருட்கள்

01. மாவிலை
02. தலைவாழையிலை – 5
03. அறுகம்புல்
04. சொரிபூக்கள்
05. கோசலம், கோமம்
06. பால், தயிர்
07. நெய்
08. தேன்
09. எள்
10. வெற்றிலை, பாக்கு
11. வாழைப்பழம்
12. எலுமிச்சம்பழம்
13. இஞ்சிக்கிழங்கு
14. கற்பூரம்
15. சம்புறானி
16. ஊதுபத்தி
17. சக்கரை
18. நல்லெண்ணெய்
19. இளநீர்
20. செம்பு, – 2 (நிறைகுடம்)
21. குத்துவிளக்கு – 3 (நிறைகுடம், படத்திற்கு)
22. தேங்காய்
23. விபூதி
24. சந்தனம்
25. குங்குமம்
26. பச்சை அரிசிமா
27. மஞ்சள் மா
28. கும்பநூல்
29. பச்சையரிசி
30. வேட்டி சால்லை (தானம்)
31. அரிசி (தானம்)
32. மரக்கறி
33. உப்பு
34. புளி
35. பருப்பு
36. மிளகாய்த்தூள்
37. தட்சணை
38. சிறிது உளுந்து மா
39. அரப்பு
40. மாலை – 2 (கும்பம், பிண்டம், படத்திற்கு)
41. இறந்தவர் படம்

**மாளயம்**

பொது சிரார்த்தம் மாளயம் ஆகும். புரட்டாதி மாத அபரபக்க பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளய காலமாகும். தெரிந்தோ தெரியாமலோ பிதிர்க்கடன் செய்யத்தவறியவர்கள் மாளய பட்சத்தில் பிதிர்கள் பூவுலகிற்கு வந்து தமது தேவையை பூர்த்தி செய்ய விழைகின்றன. எனவே இக்காலத்தில் செய்யப்படும் தர்ப்பணமும் சிரார்த்தமும் சிறப்பானவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

என்ற திருவள்ளுவரின் திருக்குறட்பாவிற்கு இணங்க ..............அன்று எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்கள் நலனிற்காக வழியமைத்து எம்மை ஆறாத் துயரினில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம் குடும்ப விளக்கு

## அமரர் வெற்றிவேலு முத்துக்குமாரு அவர்களின்

மரணச்செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அயலவர்களுக்கும் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித் தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட வர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தி யவர்களுக்கும் கிரியைகளை செய்ய உதவிய உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்களுக்கும் இறுதி யாத்திரியையின் போது கடைசிவரை கலந்து கொண்டவர்களுக்கும் அந்நேரத்தில் ஏற்ற பல உதவிகளை செய்து எம் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் உண்டிகள் தந்து உபசரித்தோர்க்கும் இம்மலரினை சிறந்த முறையினில் அச்சிட்டு வெளியிட உதவிய நண்பர்களுக்கும் மேலும் அந்தியேட்டி சபீண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள், எல்லோ ருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org